செய்தி வெளியீடு எண்: 968 நாள்: 01.11.2010

**தமிழ்நாடு கடல்சார் வாரியம் சார்பில்**
**தமிழக அரசுக்கு 4 கோடியே 75 இலட்சம் ரூபாய்**
**வருவாய்ப் பங்குத் தொகை!**
**முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்**
**நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வழங்கினார்.**

1997ம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மேம்பாட்டிற்காக 2007ஆம் ஆண்டில் சிறு துறைமுகங்களுக்கான கொள்கையினைத் தமிழக அரசு வகுத்தளித்தது. இதன் பயனாக தமிழகத்தில் சிறு துறைமுகங்களின் எண்ணிக்கை 11ல் இருந்து 22 ஆக உயர்ந்து, இத்துறைமுகங்கள் வாயிலாக 2009–10ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவு 11.75 இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மொத்த வருவாய் 22 கோடியே 57 இலட்சம் ரூபாய் என உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருவாய் 49 விழுக்காடு அதிகரித்துள்ளது.

2009–2010 ஆம் ஆண்டின் வருவாயிலிருந்து தமிழக அரசுக்கான வருவாய் பங்குத் தொகையாக (Revenue Share) 4 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் அதன் தலைவரும் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சருமான திரு.வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன் இன்று (01–11–2010) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், திரு.மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., உள்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., மாநிலத் துறைமுக அலுவலர் கேப்டன் எஸ்.சாய்நாத் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *